

செல்வி

# அபிராமி பற்குணம்

அவர்களின்

# பரத நாட்டிய அரங்கேற்றம்

புனித சூசையப்பர் கல்லூரி மண்டபம்
திருகோணமலை
27-01-1994
மாலை 5.00 மணி

# கோணேசர் வாழ்த்து

திங்களொடு கங்கைதிகழ் சடைமுடியும் ஆட
  தீங்குகள் யாவுமே வெருவிநின்று அகல
மங்கள துந்துபி மருங்கில் முழங்கிட
  மருண்டவிழி மான்கள் வெருண்டங் கொதுங்க
துங்கமணி மாமலையில் தோகைமயில் ஆட
  தூயஎழில் மாதுமைபங்கன் கோலம் காண
பொங்கும்கடல் அலைபுவிமேல் ஓங்கி உயரும்
  பூலோகதென் கைலாயம் அமர்ந்த கோணேசா போற்றி.

DONATED TO
JAFFNA UNIVERSITY LIBRARY
BY
Prof. [illegible] Sivathamby
in memory of his Father
PANDIT SAIVAPULAVAR
T. P. KARTHIGESU
2000

AUM

Bharatha Nattiya Arangetram

of

# *ABIRAMY*

Disciple of 'NATTIYA KALAIMANI'

Mrs.Renukadevi Selvaputhiran

Under the distinguished patronage of

Dr.S.Mounaguru M.A, Phd.

Dean, Faculty of Arts & Fine Arts,

Eastern University

ON

Thursday the 27th of January 1994

at 5.00 p.m

at

St.Joseph's College Hall,

Trincomalee.

# தலைவரின் ஆசிச் செய்தி

உடல் உறுப்புக்களின் அசைவுகளை ஒரு லயத்திற்குள் கொணர்ந்து கற்பனை கலந்து அழகியல் அனுபவம் தரும் கலை நடனக்கலை. இந்தியக் கலைகளுள் பரதக்கலை பிரதானமானது. நீண்ட பாரம்பரியமுடையது. அரங்கேற்றம் பரதக்கலையின் முதற்படி தாண்டும் முயற்சி. பரதத்தின் அடிப்படைத் திறன்களைக் கற்றுக்கொண்டமையின் வெளிப்பாடு அது எனலாம். ஒரு கலையின் அடிப்படைத் திறன்களை சிறப்பாகக் கற்பதுடன் புதிய கற்பனைகளை உருவாக்கி இன்னொரு தளத்திற்கு அதனை இட்டுச் செல்பவர் கலைஞர். (ARTIST)

'நம் மத்தியில் விளைஞரே அதிகம் கலைஞரோ சொற்பம்'

அர்ப்பணமும் இடையறாத பயிற்சியும், கற்பனை வளமும் கொண்டவர்கள் கலைஞராக பரிணமிக்க வாய்ப்புண்டு. செல்வி.அபிராமி பற்குணம் துடி துடிப்பும், கலையார்வமும் மிக்க சிறுமி. ஒரு வருடத்திற்கு முன்னர் எம்மால் திருமலையில் நடாத்தப்பட்ட நாடகப்பயிற்சிப் பட்டறையில் எமக்கு அவர் அறிமுகமானார். பயிற்சியில் அவர் காட்டிய ஈடுபாட்டினால் எம் கவனத்தை அவர் ஈர்த்துக் கொண்டார். அர்ப்பணிப்போடு செயலாற்றும், அவரின் குணாதிசயத்தையும், அவரின் கற்பனைத் திறனையும் பயிற்சிப் பட்டறையில் என்னால் அவதானிக்க முடிந்தது. சிறுவயதில் பல திறன்கள் அவரிடம் குவிந்துள்ளன. கலைஞர்க்கு வேண்டிய அடிப்படை அம்சங்களைக் கொண்ட அபிராமியின் அரங்கேற்றம் மகிழ்ச்சி தருகின்றது. அபிராமிக்கு வயது 14. மேலும் பரதத்தைப் பழகவும், அதுபற்றிக் கற்கவும் நிறைய வாய்ப்புள்ள வயது. பெற்றோரும், நண்பர்களும், உறவினரும் அவரை ஊக்குவிக்கும் தகைமையினர். அபிராமிக்கு வாய்த்த வாய்ப்பு அது: தனது திறமை, சூழல், காலம் இவற்றைச் சரியானபடி கையாண்டால் அபிராமி ஒரு நல்ல கலைஞராக எதிர்காலத்தில் பிரகாசிக்க முடியும். அர்ப்பணிப்பும், பயிற்சியும் இதற்கு மிக மிக அவசியம்.

அபிராமிக்கு இத்திறமை உண்டு. அபிராமியின் வளர்ச்சிக்கு என் ஆசிகள். அரங்கேற்றம் நிறைவாக அமைய என் வாழ்த்துக்கள்.

கலாநிதி சி.மௌனகுரு.

# கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



எமது கல்லூரி மாணவி கலைப் பூங்காவின் அற்புதச் சுடர் செல்வி அபிராமி அவர்களின் நடன அரங்கேற்றம் நிகழ இருப்பது கேட்டு உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

கல்வி ஏட்டளவில் மட்டும் நின்றுவிடக் கூடாது. மக்களின் நாகரிகத்தை ஆண்டாண்டு காலம் பேணிக்காத்து வந்த, அழகியற் கலைகளுக்கு கல்வியில் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். இன்று கல்விக் கூடங்களில், கவின் கலைகளுக்குக் கருத்திட்டங்களிலும் நடை முறைகளிலும் அரசாங்கம் உரிய, உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் தமிழ்த் தினப்போட்டிகளை மாணவர்களிடையே நடாத்தி கலை வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கப்படுகின்றது. இத்தகைய போட்டிகளில் - தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில், எமது கல்லூரியின் சார்பில் கலந்து, தனி நடனப் போட்டிகளில் இரு தடவைகள் செல்வி அபிராமி தங்கப் பதக்கங்களை வென்றெடுத்து, எமது கல்லூரிக்கு மேலும் பெருமை தேடித்தந்தார்.

அத்துடன் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்த எமது இலக்கிய நாடகத்தைப் பார்த்தவர்கள், அபிராமி நடித்த 'அமராவதி'ப் பாத்திரத்தை மறக்க முடியாதவாறு அவர் பாத்திரமாக மாறிப் பார்த்தவர்களைப் பிரமிக்க வைத்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. தனது திறமைகளைக் கவனத்துடன் - அயரா முயற்சியுடன் வெளிக்காட்டுவதில் அபிராமி முன்னணியில் நிற்பவர்.

இந் நடன அரங்கேற்றம் சிறப்பாக நடந்தேறவும், அபிராமியின் சீரிய பண்புகளும் கலை ஆற்றல்களும் பல்கிப் பெருகிச் சுடர் விட வேண்டுமெனவும் வாழ்த்தி, அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை
08-01-1994

அருட்செல்வி திரேஸ்ராணி
அதிபர்

திருகோணமலை இராசரத்தினம்
நடனாலய அதிபரும் குருவுமான
''கலைமணி''
திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன்
*Dip-in-Dance, University of Jaffna*



வழங்கிய

# ஆசிச் செய்தி

நாட்டியக் கலை தெய்வீகமானது; புனிதமானது. சிவன் தாண்டவத்தையும், சக்தி இலாசியத்தையும் ஆடினார்கள். வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இக் கலை எமது மூதாதையரால் ஆடப்பட்டும், பேணப்பட்டும் வந்துள்ளது. பரதக் கலைக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு மேலான வரலாறு உண்டு. ஆண்டவனால் உருவாக்கி ஆடப்பட்ட இக்கலையைப் பயின்று, ஆண்டவனுக்கே சமர்ப்பணம் செய்யும் போது மக்களும் பயனடைகின்றார்கள்.

இப் புனிதமான கலையைப் பயின்று அரங்கப் பிரவேசம் செய்யும் செல்வி அபிராமி பற்குணம் பற்றி ஒரு சில வார்த்தைகள்.

> ''சிரித்த முகமும் சீரிய பண்பும், மிகுந்த குரு பக்தியும், எதையும் எளிதில் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும், அகப் புலப்பாடுகளைத் துல்லியமாக வெளிக்காட்டும் திறனும் கொண்டவர்.''

இதனால் இவருக்குப் பயிற்சி அளிப்பது எளிதாயிற்று. எந்தவொரு கலை நிகழ்ச்சியிலும் அபிராமி பங்கு பற்றும்போது மிகுந்த ஆர்வம் காரணமாக அவர் தனது கவனத்தையும் திறமையையும் இணைத்து அபிநயித்து நிகழ்ச்சியைச் சிறப்பித்துவிடுவார்.

இந் நடன அரங்கேற்றம் இனிது நடை பெற வாழ்த்துகின்றேன். செல்வி அபிராமி மென்மேலும் புகழ்பெற்று கலையுலகில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பிடிக்கக் கோணை நாயகன் அருள் பொழியவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

*10-01-94* — ரேணுகாதேவி செல்வபுத்திரன்





# கலையும் நடனமும்

## கலை:

கலை என்பது பல பொருள் ஒருசொல். கலை என்னுஞ் சொல், செயல்திறன், ஆண்மான், ஆண் குரங்கு, சுறாமீன், மகராசி, உடை, அமிசம், சந்திரனின் பதினாறு கூறு, ஒளி, சாத்திரம், நூலறிவு, மொழி, வண்ணப்பாட்டின் ஒரு பாகம். வித்தியாதத்துவம் ஏழினுள் ஒன்று, மரக்கவடு, மேகலை, காஞ்சியென்னும் இடையணிகள், மரவயிரம், கற்பூரவகை முதலிய பல பொருள்களில் இலக்கிய ஆட்சி கொண்டுள்ளது. உலக வழக்கில் இன்னும் பல பொருள்களை உணர்த்தி வருகின்றது. கணிதம், மந்திரம், தந்திரம், போன்ற யோகப்பயிற்சியால் கிட்டும் சித்திகள், பல்வேறு திறமைகள் முதலியவற்றையும் இச் சொல் சுட்டி வருகின்றது. 'கலைச்சொற்கள்'(TECHNICAL TERMS)என்னும் போது 'கலை' என்பதன் பொருள் மேலும் விரிந்து செல்கின்றது. எனினும், இங்கு'கலை' என்பதற்குச் சிறப்பாக 'அழகார்ந்த செயல்திறம்' என்னும் பொருளடிப்படையில் பலவாறாக விரிந்து நிற்கும் கூறுகளைக் காணலாம்

இயல்பாய்த் தோன்றிய பொருளை இயற்கையாகவும், மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளைக் கலையாகவும் அல்லது கலைப்படைப்பாகவும் கருதலாம். கலை என்பதற்கு அவ்வக் காலங்களில் மக்களின் வாழ்வியற் பண்பாட்டிற்கேற்பவும் நாகரிக வளர்ச்சிக்கேற்பவும், அவரவர் எந்தெந்தக் கோணத்தில் நோக்குகின்றனரோ அந்தந்தக்கோணத்தைப் பொறுத்தே விளக்கம் தரப்படுகின்றது. எனவே, கலையை இன்னதுதான் என்று இலக்கண வரையறை கூறி விளக்கவியலாது. ஆனால், கலை பற்றிச் சிந்தித்துள்ள அறிஞர் பலரும் பல்வேறு கோணங்களில் உணர்ந்து விளக்கந்தர முனைந்துள்ளனர். அவர்களின் கருத்துக்களை இயன்றவரையில் மனதுட்கொண்டு இயைத்துப்பார்த்துப் புரிந்து கொள்வதே ஏற்புடையதாகும்

காண்கின்ற காட்சியிலும் கேட்கின்ற இன்னோசையிலும் மனங்கவிந்து, நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை, ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவிவாயிலாகப் புலப்படுத்த ஆர்வங் கொள்கின்றான். அவன் கல்லைக் கருவியாகக் கொண்டு சிற்பத்தையும், வண்ணத்தை கருவியாகக்கொண்டு ஓவியத்தையும், ஓசையைக் கருவியாகக்கொண்டு இசையையும், நடிப்பைக் கருவியாகக்கொண்டு கூத்தையும், இவ்வாறே சிறப்பான ஒவ்வொன்றையும் கருவியாகக்கொண்டு ஒவ்வொரு கலையையும் வினைப்பாங்குடன் உருவாக்கலானான். இவ்வாறாக உருவாக்கப்பட்ட கலை பற்றிச் சிந்திக்கையில், கலை என்பது செயல் திறனைச் சிறப்பாக உணர்த்துகின்றது. 'வினையமை பாவையின் இயலி' (நற்.352 - 1) என்னுமிடத்தில் வினையென்பது கலைப்படைப்பிலுள்ள செயல் திறனைக்குறித்துள்ளது. இந்தக் கலை, அழகு ஏற்படுத்தும் வகையில், செய்வதையும் குறிக்கும்; சுவை பயத்தலையும் பயன்பாட்டையும் குறிக்கும். ஆகவே, கலையில் செயல்திறம் அழகு, சுவை பயன் என்ற கூறுகளை காணலாம். பயன் என்னுங் கூறு மிகுதிப்படுமேயெனின் அது கம்மியம் (தொழில் -CRAFT) என்ற பிரிவில் அடங்கும்: இந்நிலையில் அது வன்கலையாகும். அழகுக்கூறே மிகுதியாக அமைந்து, பயன்கூறு குறையுமே எனின் அது அழகுக் கலையாகும். அதனை மென்கலை, கவின்கலை, கோமளக்கலை, அருங்கலை, இலலிதக் கலை என்பர்.

பொதுவாக கலையில் கற்பனை கவிந்து நிற்கும். அந்தக் கற்பனையை அடிப்படையாகக் கொண்டு அறிவு ஊக்கம், செயல்திறம் ஆகியவை ஒருமுகப்படும் ஒருவகைத் தவத்தின் வெளிப்பாடே கலையாகிறது. காலத்திற்குக்காலம் மக்கள் சமுதாயத்தையும் எண்ணங்களையும், அழகுணர்வுடன் கலை எதிரொலிக்கின்றது. அது மக்களின் பதிவேடாகவும் பயன்படுகின்றது என்பதே கலைத்திறனாய்வாளர்கள் பலரின் கருத்தாகும்

சிறப்பு விளக்கங்கள்:-பௌத்தர்களின் கொள்கைப் படி, கலை என்பது ஒரு மனிதனின் உள்ளுணர்விலேயே காணப்படுவதாகும். எனவே, அது

புறத்தேயுள்ள பொருளில் அமைவதன்று என்பது சிறப்புக்குறிப்பாகும். இந்துக்களோ உள்ளுணர்வு, புறத்தேயுள்ள பொருள் ஆகிய இரண்டையுமே கலையின் இரு கூறுகளாகக் காண்பார்கள்; மேலும், கலையிலுள்ள அழகுணர்வு என்பதே ஒரு சித்தவிருத்தி என்றும், அவரவருக்குள்ள முன்வாசனையின் அனுபவ நிலையின் அளவே அவ்வுணர்வு அமையும் என்றும், அவ்வழகுணர்வு கருத்து எண்ணம், பாவம் கற்பனை ஆகியவற்றைப் பற்றி நிற்கும் என்றும் கருதுவார்கள்.

மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காகச் சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான, கவர்ச்சியுள்ள, ஆற்றலுடைய கருவியே கலை என்கின்றார் இராதாகமல்முகர்ஜி. கலை என்பது கலைஞனது அனுபவத்தினை அவன் வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்று; அதன் வெளிப்பாட்டினையே கலைஞன் உணர்வு நிலையில் துய்க்கிற அனுபவமுமாகும், என்பர் டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். கலைஞர்கள் அழகுணர்ச்சியுடன் வேண்டுவன, பொருந்துவனவற்றை மட்டுமே தேர்ந்து கொள்கின்றனர்; மற்றவற்றை விட்டுவிடுகின்றனர். பெரும்பாலானோர் தன்னலம் கொண்டு கண்மூடிச் செய்வதையே கலைஞர் அழகுணர்ச்சிகொண்டு தெளிவுறச் செய்கின்றனர் எனலாம். அதனால் பெரும்பாலானோர் கண்டு, கேட்டு,உணர்ந்து புலப்படுத்துவன கலையாக விளங்கி, கற்பவரின் உள்ளத்தைக் கவர்கின்றன என்பர் டாக்டர் மு.வரதராசனார்.

மேனாட்டறிஞர்கள் சிலர்தம் கோட்பாடுகளும் கலையினைப்பற்றிப் புரிந்து கொள்ளத் துணைநிற்கின்றன. ஒருவன் தன் கற்பனைக்குப் பொருளாகக் கொள்ளப்பட்ட அந்தப்பொருளின்மீதும் மனிதனின் சிந்தனைகளையும் மன உணர்ச்சிகளையும் ஏற்றுவதன் வாயிலாக இயற்கைக்கு மனிதத் தன்மையை ஊட்ட வல்லதிறனே கலையென்பர் கோல்ட்றிட்ஸ் செலிங் என்பவர். கலை மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரைக் கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும் என்பர் கவின்கலையில், கலைஞனின்

கை,மூளை,இதயம் ஆகிய மூன்றும் இணைந்து செய்கின்றன என்பார் ரஸ்கின்(Ruskin). கலை என்பது இயற்கைப் பொருட்களில் விளங்கும் உண்மையாகும். கலைஞனின் பணி யாதெனில், இயற்கையினூடே பொலிவுறும் உண்மையைக்கண்டு தன் கலைப்படைப்புவாயிலாகத் தக்க வண்ணம் வெளிப்படுத்துவதாகும்.

கலையாக்கத்தின் அடிப்படைகள்:

1.கலைஞன் இயற்கையில் காணலாகும் பல்வேறுகூறுகளை நுனித்தறிந்து போற்றுந்திறன்

2.உலகப் பொருள்களில் உள்ள பல்வேறு இயல்புகளையும் அவற்றின் பொருத்தத்தையும் புரிந்துகொள்ளுதல்

3.பொருளைக் காண்கையில் அதன் சூழலையும், அச்சூழலை விட்டு அதனைத் தனித்து நோக்கி அதனால் மனதிற்படியும் மாறுதலையும் சீர்தூக்கிப் பார்க்கும் கலைஞனது திறமை.

4.கலைஞன் அவ்வப்போது திரட்டுகின்ற அழகனுபவங்களை கலைப்படைப்பின் போது தேவைக்கேற்ப நினைவிற்கு கொணரும் ஆற்றல்.

5. அவன் தன் கலைப்படைப்பிலே தன் மகிழ்ச்சியையும் ஆளுமையையும் கலந்தளிக்கும் வகையில் தன் மனத்தில் எழுந்த அழகனுபவ காட்சிக்கு சிறிது சிறிதாக புறவடிவம் அளிக்கப்பழகுதலும் ,அதற்கேற்பச் சிந்தனைத் திறன் கொண்டு ஒருவகைத் தியான நிலையில் கலைப்பொருளை அகக்கண்ணால் காணும் பரிபக்குவமும் மனப் பயிற்சியும் கொள்ளுதல்.

6.அவன் தான் பெறும் அகக்காட்சிக்கேற்பக் கலைவடிவம் தருகையில் கலைக் கருவியாகிய கோடுகளாலும் வண்ணங்களாலும் உருவமைப்புக்களாலும் ஒலிக்கலவைகளாலும் புலப்படுத்தித் தன் கைகள், கண்கள், செவிகள், மனம் முதலியவற்றைப் பழகிக் கொள்ளுதல்.

7.அவன் கலையின் பொருட் கூறுகளையும் சமுதாய வாழ்க்கைப் போக்கினையும் ஒழுகலாற்றையும் நன்கு தெரிந்து தெளிவு கொள்ளுதல்.

8.சிறந்த கலைப்படைப்பை நாடுகையில் அவன் தன் புறவுலகியல் தேவைகளை ஓரளவு அப்போதைக்கு மறந்த நிலையிலே கலையில் ஒன்றுகிற ஈடுபாடு

மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத் தேட்டத்தைச் சத்தியத்தின் புலப்பாட்டிற் காகவே வழங்கிக் கலையை உருவாக்கும் மனவுறுதி.

கலைப்பயன்கள் : கலையின் சிறப்புக் கூறாகிய அழகால் இன்பம் கிட்டுகிறது. கலையும் அழகும் நேர் தொடர்புடைய நிலையில், மக்களின் பகுத்தறிவு அங்கே குறுக்கிடுமெனின் கலையழகு குன்றிவிடும்; கலைப்ப யனாகிய இன்பமும் கிட்டாது. கலைப் படைப்பு வாயிலாகச் சில வேளைகளில் தொனிப்பொருள் (Suggestion)கலைஞனால் மிக நுட்பமா கப் புலப்படுத்தப்படும்; அந் நிலையில் சமுதாயம் மிகப் பயன் கொள்ளும்.

கலை எந்த நோக்கத்துடன் படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தினைச் சுவைஞனும் புரிந்து கொண்டு, அதனை அழகனுபவத்துடன் சுவைத்தால் தான் கலையின் பயன்கொள்ள வாய்ப்பேற்படும். இந் நிலையில் கலையைத் துய்க்க வேண்டுமெனில் நுண்ணுணர்வுக்கு வேலை தர வேண்டுமென்று சிலரும் நுண்ணுணர்வின் தொடர்பின்றியே அது இயலுமென்று சிலரும் கூறுவர்.

கலை தன் அழகுக் கூறால் மக்களுள்ளங்களைக் கவர்ந்து இன்புறுத்துகின் றது. மக்களின் வாழ்க்கையில், சிறப்பாக ஒழுகலாறுகளில் அது பின்னிப் பிணைந்து அவர்களின் வாழ்விற்குச் சமுதாயத்தில் மதிப்பும் ஏற்றமும் நல்குகின்றது. அவர்கள் தம் பண்பாட்டைப் புரிந்துகொள்ள ஒரு வகையில் அளவுகோலாகவும் பயன்படுகின்றது. இந் நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகிய வற்றிலும் கலை ஊடுருவி நிற்கின்றது. கலைஞனின் அழகனுபவம்(Aesthetic Experience)சுவைஞனின் அழகனுபவத்திற்கு வழிகோலுவதால் கலை யின் நோக்கம் படிப்படியே உலகளாவியதாய் அமைகின்றது. அந் நிலையில் கலையானது நாடு, இனம், மொழி, சமயம் ஆகிய எல்லைக ளைக் கடந்து பயன்படுகின்றது.

வாழ்வில் ஏற்படும் சோர்வையும் துன்பத்தையும் களையும் கருவியாக கலை, மக்களுக்கு மட்டுமே பயன்படுவது என்றில்லாமல் பறவை.

விலங்கு முதலிய உயிரினங்களுக்கும் பயன்படுவதாகிறது. இதனைக் கண்ணன் குழலோசையாலும் ஆனாய நாயனார் குழலோசையாலும் உயிர்கள் மயங்கி இன்புற்ற செய்தி கொண்டு உணரலாம்.

வாழ்க்கையில் வெறுத்தொதுக்கப்படும் துன்பங்களும் நிகழ்ச்சிகளும் கலைப்பொருள்களாகக் கலை வடிவம் (நடனம் நாடகம் முதலியவற்றில்) பெறுகையில் சுவைஞர்களுக்கு அதுவும் ஒருவகையில் கலையின்பமாக மாறி விடுதலைக் காணலாம். ஏனைய சுவைகளிலும் அவலச் சுவையே மக்களைக் கவர்வதில் சிறந்தது என்பதை ஈண்டு நினைவுகூரலாம். சிறந்த கலைப் படைப்பினால் நிலையாத பொருள்களும் ஒரு வகையில் நிலைபேறு கொள்கின்றன. இயற்கை நிகழ்ச்சிகள், உயிர்கள் முதலியவற்றில் காணலாகும் நிலையாத அழகுக்கூறுகளைத் தனக்குக் கருப்பொருளாக ஏற்று, அவற்றைத் தன் வடிவத்திலே நிலைபேறு கொள்ளச் செய்கின்றது கலைப்படைப்பு எனலாம். குழப்பமான உலகத்தில் இன்பத்தை தேர்ந்தெடுத்துச் சுவைக்கின்றனர் மக்கள். கலைஞன் மக்களின் தேவைக்கேற்ப அழகுக்கூறுகளை இசைவுடன் ஒருங்கிணைத்துக் கலையின் வாயிலாக வழங்குகின்றான்.

இந்தியக் கலைஞனைப் பொறுத்தவரையில் அவன் காணும் அழகுப் பொருளைப் புலப்படுத்துவதை விட உள்ளதை உணர்ந்தவாறு புலப்படுத்தவே கலையைக் கருவியாகக் கொள்கின்றான். அந் நிலையில் கலை, மக்களின் மனத்தையும் இதயத்தையும் தூயநெறியில் செலுத்தும் ஆன்மநலக் கருவியாகவே பயன்படுகின்றது. ஆகவே, கலைப்பயன்கள் பலவற்றையும் நோக்கும் போது, எம்மைப்பொறுத்தவரையில் 'கலை வாழ்க்கைக்காகவே ' என்பது பெரும் பாலும் பொருந்துவதாகும். 'கலை கலைக்காகவே 'எனக்கொள்வது பிற நாடுகளுக்கு மிகவும் ஏற்புடையதாகும்.

கலை - பாகுபாடு : கால வளர்ச்சியில் கலையிலே பல பாகுபாடுகள் அமைந்தன. முற்காலத்திய கலை ( Primitive Art)நாட்டுப்புறக்கலை (Folk Art)செவ்வியற்கலை அல்லது தரச்சிறப்பான கலை ( Classical Art) என வகைகள் உண்டு. முற்காலத்திய கலையில் தன்னிச்சையான

மனிதனது கரடுமுரடான உணர்ச்சி வெளிப்பாடு பதிவு பெற்றிருக்கும்; மரபான விதிகளை அதனில் காணவியலாது; அது ஒரு வகையில் திருந்தாத கலையாகும்.

நாட்டுப்புறக்கலையில் முற்காலத்திய கலையிலுள்ள கரடுமுரடான கலை மாறிப் படிப்படியே பண்பட்ட நயமான கூறுகள் விதிகளுடன் அமையலாயின. அந்தக்கலையை ஒருவகையில் சிற்றூர்ப் புறக்கலையெனலாம். செவ்வியற்கலையில் காலத்தின் வளர்ச்சியாலமைந்த மதிநலமும் கற்பனை வளமும் மெருகும் பொருந்தி, அது மக்களுக்கு மிகுந்த இதமான உணர்வுகளை நல்கியது.அதனை ஒருவகையில் நகரத்தொடர்புடைய நாகரிகநயம் வாய்ந்த - ஒழுங்கிற்குட்பட்ட கலையெனலாம்.

கலையில் உண்மையியல் (Realism)கற்பனையியல்( Romantism)எனப் பாகுபாடுகளும் உண்டு. வாழ்க்கையுடன் ஒட்டியவற்றை மிகுதியாகப் படைத்துத் தருதலை உண்மையியல் அல்லது உள்ளது புனைதல் என்றும், வாழ்க்கையில் பயிலாதவற்றை மிகுதியகக் கற்பனை செய்து படைத்துத் தருதலைக் கற்பனையியல் அல்லது இல்லது புனைதல் என்றும் பகர்வர் கற்பனையியலில் வெறுங்கற்பனை(Fantastic Imagination) அமைவதுமுண்டு; அது சிறந்ததன்று. குறிக்கோளியலில் கற்பனை அமையும்போது அந்தக் கலை குறிக்கோளியற் கலை (Idealistic Art)ஆகும்.

ஒப்புமைக்கலை என்பதனுள் கலைஞனின் படைப்பாற்றலுக்கேற்பப் பல வகைமைகள் உருவாகும். கலையில் குழைத்து உருவாக்கத்தக்க குழைமக்கலை (Plastic Art) அசையாக்கலை(Static Art)என வகையுண்டு. மேலும், இயக்கமுள்ள கலை ( Dynamic Art)என்றும் ஒரு வகையுள்ளது. பொம்மை செய்தல் முதலியவை குழைமக்கலையாகவும், கட்டடக் கலை அசையாக்கலையாகவும், இசைகூத்து முதலியவை இயக்கமுள்ள கலையாகவும் கருதப்படும்.

கலைகளைப் பாகுபடுத்திக் காண இடமும் காலமும் ஒரு வகையில் கருவிகளாகத் துணை நிற்றல் உண்டு. காலத் தொடர்பிலும் இடத்தொடர்பிலும், காலம், இடம் ஆகியவற்றின் தொடர்பிலும் பாகுபாடுகள் உண்டு. எடுத்துக்காட்டாகச் சிற்பக்கலை என்பது அசையாக்கலையாகவும், அதே வேளையில் இடம்,காலம் ஆகியவற்றைப் பொறுத்த கலையாகவும் கருதப்படும்.

அருங்கலைகளுள் ஓவியம் பிற கலைகளுக்குத் தாய்த் தன்மையுடையதாக கருதப்படும் . இசை மிக நுட்பமான கலையாகவும், கட்டடக்கலை பயன் மிகுதியுடைதானாலும் கலையுணர்வில் தாழ்ந்த கலையாகவும் பாகுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கலையிலும் உட்பிரிவுகளாகப் பாகுபாடுகள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக . இசையைச் சிறிது காண்கையில் மிடற்றிசை(Vocal Music)என்றும், கருவிசை { Instru mental Music)என்றும் வகைமையுண்டு. இசைக்கருவிகளுள் நரம்பிசைக்கருவி (Stringed Instrument)மேது இசைக்கருவிஅல்லது தோற்கருவி (Percussion Instrumnet) துளைக்கருவி (Wind Instrument) கஞ்சக்கருவி(Bell Metal Instrument) என வகைகள் உண்டு அவை ஒவ்வொன்றிலும் பல்வேறு இசைக்கருவிகள் உள்ளன. பொதுவாக , இசை நுட்ப நோக்கில் வகைமைப்படுத்தி இன்னிசை(Mclodious Music) என்பதனை அடிப்படையாகக் கொண்டு, இந்திய இசையென்றும், ஒத்திசை அல்லது ஒருங்கிசை (Hrmonious Music) என்பதனை அடிப்படையாகக் கொண்டு மேனாட்டிசையென்றும் காணலாம். இந்திய இசை என நோக்குகையில் கருநாடக இசை , இந்துஸ்தானி இசை ஆகிய உட்பிரிவுகள் உண்டு. இவ்வாறாகக் கலையின் பாகு பாடுகள் பலவாக விரிந்து பரந்துள்ளன.

இவ்வாறெல்லாம் பாகுபாடுகள் பலவாகவுள்ள கலைகளையெல்லாம் எவ்வாறேனும் எண்ணிக்கையடிப்படையில் வகைப்படுத்த முயன்றனர். அவ்வாறான முயற்சியின் விளைவாகக் கலைகள் 64 என்பது பொதுவாக

எல்லா இந்தியப் பேரிலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களும் தன்மையும் மக்கள் புரிந்து கொள்வதற்கு இராமாயணம், காதம்பரி, தசகுமார சரித்திரம் முதலிய காப்பியங்களும்,வாத்சாயனர் எழுதிய காமசூத்திரமும்,தண்டி எழுதிய காவியாதர்சமும் , சில தந்திர சாத்திர நூல்களும் பயன்படுகின்றன. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பதை 'எண்ணெண்கலையோர்' என்று சிலப்பதிகாரம் (14:167) குறிப்பிடுதலாலும் அறியலாம்.

சமண நூல்கள் ஆடவர் கலைகள் 72 என்றும்,மகளிர் கலைகள் 64 என்றும் குறிப்பிடுகின்றன. ஆனால்,நூல்களில் வருணிக்கும் போது 72க்கு மேலும் கலைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் பல பழங்கலைகளின் உட் பிரிவுகளாகவுள்ளன. அனைத்தையும் நோக்குகையில் கலை என்ற வளாகத்துள் உலகத்தில் காணலாகும் பல துறைகளிலுமுள்ள வித்தைகளும் நுண்கூறுகளும் கொள்ளப்படும் முயற்சிதென்படும்.

அறுபத்து நான்கு கலைகளை ஆராய்ந்தால், அவற்றை அழகுக் கலைகள், அறிவுக்கலைகள்,பயன்படு கலைகள், உடற்பயிற்சி, விளையாட்டு, பொழுதுபோக்கு, இன்பத்திற்கு உதவுபவை,சில்லறைப் பொது அறிவுகள் என்ற வகைகளில் அடக்கிக்காணலாம். அவற்றுள் முதலிடம் பெறுங் கலைகளான ஆடல்(நிருத்தியம்),பாடல், இசைக் கருவிகள்,வீணை-தமருகம்,வாத்தியம், ஓவியம்,கவிதை(காவியக் கிரியை) ஆகியவற்றை வாத்சாயனர் குறிப்பிடுகின்றார். பிற கலைகளையெல்லாம் கவிதைக்கு உதவும் அறிவுகள், இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவு, சொல் ஆகியவற்றின் தேர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் உதவும் கலைகள்,மொழிகளை அடிப்படையாகக் கொண்ட கலைகள், இலக்கியப் பயிற்சியுடன்தொடர்புள்ள வேறு சில கலைகள், வீட்டிலும் வாழ்க்கையிலும் அழகையும்,சுவையையும் மேம்படுத்த உதவுவன, உடலலங்காரத் திற்கானவை, மற்ற அறிவுகள் விளையாட்டு பொழுது போக்கிற்கானவை என்ற பிரிவுகளுடன் அடக்கி காண்கின்றார். இவற்றை தவிர 65- ஆவது கலையாகப்'புப்ப சகடிகா' என்ற ஒன்றைக் குறிப்பிடுகின்றார். கலைகளைப் பற்றிய அட்டவணை சில நூல்களில் சிற்சில மாறுதலுடன் அமைந்துள்ளது

நாட்டு நலத்திற்கும் பெருமைக்குரிய கலைஞான வகை அறுபத்து நான்காகக் கணக்கிட்டு உரைக்கப்படும். அவையாவன.

| | |
|---|---|
| 1. அக்கர இலக்கணம் | 2. இலிகிதம் |
| 3. கணிதம் | 4. வேதம் |
| 5. புராணம் | 6. வியாகரணம் |
| 7. நீதிசாத்திரம் | 8. சோதிடநூல் |
| 9. தரும சாத்திரம் | 10. யோகநூல் |
| 11. மந்திரநூல் | 12. சகுனநூல் |
| 13. சிற்பநூல் | 14. மருத்துவநூல் |
| 15. உருவசாத்திரம் | 16. இதிகாசம் |
| 17. காவியம் | 18. அலங்காரம் |
| 19. மதுரபாடனம் | 20. நாடகம் |
| 21. நிருத்தம் | 22. சத்த பிரமம் |
| 23. வீணை | 24. வேணு |
| 25. மிருதங்கம் | 26. தாளம் |
| 27. அத்திர பரீட்சை | 28. கனக பரீட்சை |
| 29. இரதப் பரீட்சை | 30. கச பரீட்சை |
| 31. அசுவ பரீட்சை | 32. இரத்தினப் பரீட்சை |
| 33. பூ பரீட்சை | 34. சங்கிராம பரீட்சை |
| 35. மல்யுத்தம் | 36. ஆகருடணம் |
| 37. உச்சாடனம் | 38. வித்துவேடணம் |
| 39. மதன நூல் | 40. மோகனம் |
| 41. வசீகரணம் | 42. இரச வாதம் |
| 43. காந்தருவவாதம் | 44. பைபீலவாதம் |
| 45. கௌத்துவவாதம் | 46. தாதுவாதம் |
| 47. காருடம் | 48. நட்டம் |
| 49. முட்டி | 50. ஆகாயப்பிரவேசம் |
| 51. ஆகாய கமனம் | 52. பரகாயப் பிரவேசம் |
| 53. அதிரிசயம் | 54. இந்திரசாலம் |
| 55. மகேந்திரசாலம் | 56. அக்கினித்தம்பம் |
| 57. சலத்தம்பம் | 58. வாயுத்தம்பம் |
| 59. திட்டித்தம்பம் | 60. வாக்குத்தம்பம் |
| 61. சுக்கிலதம்பம் | 62. கன்னத்தம்பம் |
| 63. கட்கத்தம்பம் | 64. அவத்தைப்பிரயோகம் |

## நடனம்

அறிவு வளர்ச்சியும் நாகரிகமும் முதிர்வு பெறுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றான். ஆதிகால மனிதன் பாடிய இசையையும் ஆடிய கூத்தையும் கலை வடிவங்கள் என்று கூறமுடியாது. அவற்றிற்கு இலக்கணம் வகுக்கப் பெறவில்லை. அவை பண்படாத நிலையிலேயே இருந்து வந்தன. இன்றும் இத்தகைய இசையையும் நடனத்தையும் பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோர்களிடையே காணலாம்.

நாகரிகம் வளர்ச்சி அடைய அடைய இசை, ஆடல் முதலியவை முன்னேற்றம் அடைந்து, கலை வடிவங்களாகத் திகழ்ந்தன. மேலும் அவை பல வகைகளாகப் பிரிக்கப்பெற்றன. இந்தியாவில் மிகத் தொன்மையான கூத்துநூல் என்று கருதப்பெறும் நாட்டிய சாத்திரத்தை இயற்றிய பரத முனிவர் நாட்டியம் என்ற சொல்லுக்குப் பாடல், ஆடல், அபிநயம், உரையாடல், ஒப்பனை, காட்சித்திரைகள் ஆகியவை ஒருங்கு அமைந்த 'நாடகம்' என்றே பொருள் கூறினார்.

இதில் தாண்டவம், ஆண்களுக்கு ஏற்றதாகவும் இலாசியம் பெண்களுக்கு ஏற்றதாகவும் நிருத்தம் சுத்த நடனமாகவும் வழங்கி வந்தன. பின்னர் நிருத்தமும் அபிநயமும் கலந்த நிருத்தியம் என்ற வகையும் தோன்றியது. சிவபெருமான் ஆடிய ஆடல் தாண்டவம் என்றும், பார்வதி ஆடிய ஆடல் இலாசியம் என்றும் சொல்லப்படுகின்றன. இக்காலத்தில் ஆடல் இலக்கண நூல்களில் எண்ணற்ற நடன வகைகள் விபரிக்கப்பட்டிருக்கின்றன. பரதர் தமது நாட்டிய நூலில் விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்த மக்கள் இசையிலும் நடனத்திலும் சிறப்புற்று விளங்கினர் என்று கூறியுள்ளார்.

இந்தியக் கலாசாரத்தில் சிறப்புற்று விளங்குவது நாட்டியக்கலையாகும். இது காலத்தால் மூத்தும் இளமை குன்றாத சிறப்புத்தன்மை வாய்ந்தது. சுமார் 2000 ஆண்டுகளாக பாரதம் முழுவதும் இக்கலை பரவிக்கிடந்தது.

இக்கலைக்கு இலக்கணம் வகுத்த பரத முனிவர் நாட்டிய சாத்திரம் என்ற தனது வட மொழி நூலில் இதுபற்றி 37 அத்தியாயங்களை எழுதியுள்ளார். பரதர் கி.மு.5ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. மேலும் நாட்டிய சாத்திரம் என்ற நூல் பல நாட்டிய அறிஞர்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட ஒரு தொகுப்பு நூலாகவும் கருதுவதற்கு இடமுண்டு. எவ்வாறு இருப்பினும், இதன் முதல் சில அத்தியாயங்கள் சுமார் கி.மு.5ம் நூற்றாண்டில் எழுதப்பட்டி ருக்கலாம் என்று சில வல்லுனர்கள் நம்புகின்றார்கள்.

தமிழ் நாட்டில் வழங்கி வந்த ஆடல் வகைகளை விவரிக்கும் ஐந்து நூல்கள், கிண்டியின் 'இசை நுணுக்கம்' சியாமளேந்திரரின் 'இந்திர காளியம்' அறிவானாரின் 'பஞ்ச மரபு' ஆதிவாயிலரின் 'நாடகத்தமிழ் நூல்' என்பனவாகும் என்று அடியார்க்கு நல்லாரின் உரையிலிருந்து அறியலாம். இப்பெயர்கள் கொண்ட சில நூல்கள் [illegible]லத்தில் வழக்கிலிருந்த போதிலும் இவற்றின் முதல் நூல்கள் மறைந்து போயின என்றே தோன்றுகின்றது.

தென்நாட்டில் வழங்கிவந்த இசையையும் ஆடலையும் விவரிக்கும் கருவூலம் போன்ற நூல் சிலப்பதிகாரம் ஆகும். இதன் உரைகளையும் கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்களையும் ஆராய்ந்தால், அக்கா லத்தில் ஆடற்கலை, கூத்து குனிப்பு முதலிய பெயர்களுடன் வழங்கி வந்தது என்றும் அகக்கூத்து, புறக்கூத்து என்ற பிரிவுகளைக்கொண்டிருந் தது என்றும் அறியலாம் இவற்றைத்தவிர கடவுளர் ஆடிய அல்லியம், கொடு கொட்டி, குடை,குடம்,பேடி,கடையம்,பாண்டரங்கம்,மல்,துடி,மரக் கால் பாவை,என்று பதினொருவகைக்கூத்துக்களும் விவரிக்கப்படுகின் றன. மக்களிடையே குரவை,கலி,நடம்,நோக்கு முதலிய கூத்துக்களும் வழக்கில் இருந்தன.

பரதம்: தென்இந்திய நடன வகைகளுள் மிகத் தொன்மை வாய்ந்ததும் உலகப் புகழ் பெற்றதுமான ஆடல் வகை பரதநாட்டியமாகும். இதற்கு கி.பி 19ம் நூற்றாண்டில் தாசியாட்டம், சின்னமேளம், சதிர் என்ற



தொடர்ச்சி பக்.. 23.

கவிற்செலாந்து 'திருக்கோணேஸ்வரர் நடனாலய ' அதிபரும் ஆரம்ப காலக் குருவுமாகிய திருமதி.மதிவதனி சுதாகரன் Dip-in-Dance-,University of Jaffnaவழங்கிய

## - ஆசிச்செய்தி -

திருகோணமலையில் என்னிடம் நடனம் பயின்ற முதல் மாணாக்கருள் செல்வி.அபிராமி குறிப்பிடத்தக்கவர். குருபக்தி, அடவுகளில் சுத்தம், தாளத்துடன் இயைபு, பாடல்களின் கருத்தறிந்த அபிநயம், விடாமுயற்சி என்பன இவரிடம் நிரம்பிக் காணப்பட்டன. அபிராமியின் இத்தகைய திறமைகள்பற்றி நான் சில காலம் கண்டறிந்ததைவிட, நீண்ட காலம் கேட்டறிந்து கொண்டிருக்கின்றேன் என்பதே பொருத்தமானதாகும். திறமையும், ஆர்வமும் நிறைந்த செல்வி. அபிராமி தொடர்ந்து என்னிடம் பயில முடியாதுபோனமை எனக்கு வேதனையே. இருப்பினும், சக ஆசிரியை திருமதி.ரேணுகாதேவி அவர்களிடம் அவர் கற்பது மன நிறைவு தருகின்றது.

இந்த மகிழ்ச்சிகரமான நினைவலைகளினூடே எனது குரு திருமதி.சாரதா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களை பணிவுடனும் விசுவாசத்துடனும் நினைவு கூர்ந்து, இந்த நடன அரங்கேற்றம் மிகச் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

மதிவதனி சுதாகரன்
கவிற்செலாந்து

1994/01/03

# நிகழ்ச்சி நிரல்

| உருப்படிகள் | இராகம் | தாளம் |
| --- | --- | --- |
| கோணேசர் அஞ்சலி | | |
| அலாரிப்பு | நாட்டை | மிஸ்ரசாபு |
| ஜதீஸ்வரம் | ராகமாலிகை | மிஸ்ரசாபு |
| வர்ணம் | சங்கராபரணம் | ஆதி |
| பதம் | கல்யாண வசந்தம் | ஆதி |
| பாடலாசிரியர் -பிரம்ம ஸ்ரீ ந.வீரமணிஐயர் | | |
| கீர்த்தனை | பூர்விகல்யாணி | ரூபகம் |
| (ஆனந்த நடமாடுவார்) | | |

## இ டை வே ளை

| | | |
|---|---|---|
| பாரதியார் பாடல் | திலக் | ஆதி |
| திருமயிலைக் கீர்த்தனை | ராகமாலிகை | ஆதி |
| சாகித்தியம் பிரம்ம ஸ்ரீ ந.வீரமணிஐயர் | | |
| சீதாராம கல்யாணம் | ராகமாலிகை | ஆதி |
| குறத்தி | ராகமாலிகை | ராகமாலிகை |
| தில்லானா | ராகமாலிகை | ஆதி |

ம ங் க ள ம்

நடன அமைப்பு நட்டுவாங்கம் : நாட்டியக் கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன்.

# கலைஞர்கள்

நடன அமைப்பும், நட்டுவாங்கமும்:

நாட்டியக் கலைமணி - திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன்.

பாட்டு:

திருமதி.பத்மலோஜினி குணராஜசிங்கம்.

திரு.த.கிருஷ்ணன்.

திருமதி.கௌரி குணரெட்ணம்.

செல்வி.சௌமியா சற்குருநாதன்.

மிருதங்கம்:

திரு.சி.காண்டீபன் B.Sc.

வயலின்:

திருமதி.மதிவாணி கலைச்செல்வன்.

வீணை:

திருமதி.சுலோஜனா தேவராஜன்.

புல்லாங்குழல்:

செல்வி.கிரிஜா கனகரத்தினம்.

தபேலா:

திரு.கனக சடாட்சரம்.

ஒப்பனை:

திருமதி.காமலின் கை டி. பொன்கலன்

இசையமைப்பு உதவி:

திருமலை- பத்மநாதன்

தம்பலகமம்- சண்முகலிங்கம்

நிகழ்ச்சித் தொகுப்பு:

பால சுகுமார்

பெயர்களே வழங்கி வந்தன. பி.ஆர்இராசமய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம் (கி.பி.1893) என்னும் நூலில் இது சதிர் என்றே குறிப்பிடப்படுகின்றது. கவி சுப்பிரமணிய பாரதியார் இதைக் கூத்து என்று கூறினார். பரதநாட்டியம் என்ற பெயர் இதற்கு இருபதாம் நூற்றாண்டில்தான் அமைந்தது. பாவம்,ராகம்,தாளம் என்ற சொற்களின் முதல் எழுத்துக்களை கொண்டு இம் மூன்று சொற்களின் இறுதியில் பொதுவாக வரும் 'ம்' ஐ இணைத்தும் உருவாக்கம் பெற்றது 'பரதம்' என்ற கலைச்சொல் என்றும் கருதப்படுகின்றது.

இக்காலத்தில் பரதநாட்டியம் என்ற பெயருடன் வழங்கி வரும் ஆடல் வகை தமிழ் நாட்டின் பற்பல ஆலயங்களில், வழிபாட்டுத்தொடர்புடன் தேவதாசிகள் என்றழைக்கப்பட்ட தேவரடியார்களால் ஆடப்பெற்று வந்த தனிப்பட்ட நடனங்களை அடிப்படையாகக் கொண்டது. சோழ மன்னர்கள் தஞ்சைப் பெருவுடையார் கோயில் போன்ற ஆலயங்களில் நூற்றுக்கணக்கான தேவதாசிகளை அமர்த்தி அவர்களுக்கு மானியங்கள் அளித்திருந்தனர் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இம் மரபு பின்னர் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள், நாயக்க அரசர்கள்,மராத்திய அரசர்கள் ஆகியவர்களின் காலங்களிலும் தொடர்ந்து வழங்கி வந்தது. மேலும் தஞ்சாவூர்,கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை,விருத்தாசலம் ஆகிய ஐந்து தலங்களிலுள்ள ஆலயங்களிலும் அக்காலத்து மன்னர்கள் 'கரணங்கள்' எனப்படும் நாட்டிய அடவுகளை சிற்பங்களாக செதுக்கி வைத்ததிலிருந்து அவர்களுக்கு ஆடற்கலையில் இருந்த ஆர்வம் நமக்குத் தெரிய வருகின்றது. ஆகவே பரத நாட்டியம் என்ற கலை தமிழகம் அளித்து இருக்கும் ஒரு பெருங் கொடையாகும்.

தஞ்சையை ஆண்டு வந்த சரபோஜிமன்னர் காலத்தில்(கி.பி 1832ம் ஆண்டு வரை) பரத நாட்டியம் 18 உறுப்புக்கள் கொண்டதாக இருந்தது. ஆயினும் அவருடைய சபையில் ஆடல் ஆசிரியராக இருந்தவர்களும் 'தஞ்சை நால்வர்' என்று புகழ் பெற்றவருமான சின்னையா,பொன்னையா,சிவானந்தம், வடிவேலு ஆகியோர் பரதநாட்டியத்திற்கு ஒரு புதிய குறுகிய அமைப்பை ஏற்படுத்தி அலாரிப்பு,சதிசுரம்,சப்தம்,வர்ணம்,பதம்,

சாவனி,தில்லானா என்ற அடவை அறிமுகம் செய்து வைத்தனர். இந்த அமைப்புக்கேற்ற இசை வடிவங்கள் பல வற்றையும் இந் நால்வரும் இயற்றி நாட்டியத்திற்கு புத்துயிர் அளித்தனர்.

சென்னையில் 1930ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் படி கோயில்களில் தேவதாசிகள் நாட்டியம் ஆடும் முறை அகற்றப்பட்ட பிறகு ஆடற்கலையின் ஒளி மங்கலாயிற்று. அச்சமயம் ஈ.கிருட்டிணய்யர், உருக்குமணிதேவியார், டாக்டர்.வே.இராகவன் முதலியோரின் பெரு முயற்சி காரணமாக பரதநாட்டியம் புது மெருகுபெற்று பொலிவுறலாயிற்று. இந்த மறுமலர்ச்சியில் தோன்றி உலகப்புகழ் பெற்ற ஆட்டற்கலைஞர் பாலசரஸ்வதியாவார். ஆடற்கலை தேவதாசிகளிடமிருந்து சட்டபூர்வமாக பறிக்கப்பட்ட பின்னர் அக்கலைக்கு புத்துயிர் ஊட்டியவர்களில் முன்மையானவர்கள் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்களும் ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அவர்களும் ஆகும். இந்த இரு நாட்டிய பேரொளி விளக்குகளும் சமூகத்தாலும் அரசாலும் மறந்து போய்க்கொண்டிருந்த பரத நாட்டியத்திற்கு உயிர் கொடுத்த முன்னோடிகளாவர்.

## பரதநாட்டியம்

தென்நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டிற் பயில் நிலையிலுள்ள நடனமே பரத நாட்டியமாகும். பரத நாட்டியம் என்றும் நடனக்கலை வாக்கியம், அபிநயம் ,தாளம், ரஸம், என்ற நான்கு அம்சங்களை உள்ளடக்கியது. இவை முறையே இருக்கு.யசுர், சாம, அதர்வண வேதங்களின் சாராம்சம் என்றும். அறம்,பொருள்,இன்பம்,வீடு என்னும் நான்கு பேறுகளையும் நல்குவதென்றும் நம்பப்படுகின்றது. இக்கலை தாண்டவம் லாஸ்யம் என இரு வகைப்படும். சிவ கணத்தவருள் ஒருவரான தண்டு முனிவர் மூலம் சிவன் தந்த கலை தாண்டவம் என்றும். பார்வதிதேவி ஆடியது லாஸ்யம் என்றும் புராண நூல்கள் கூறுகின்றன.

இந்நாட்டியக்கலை நிருத்தம்,நிருத்தியம். நாட்டியம் என மூன்று வகை நடனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

நிருத்தம்:அபிநயங்களின்றி அங்கப் பிரத்தியங்களுக்குச் சொல்லப்பட்ட முறையில் சரீரத்தை மட்டும் வேண்டிய வகையில் அசைப்பதும் வளைப்பதும் நிருத்தமாகும்.

நிருத்தியம்: ரசபாவங்களைக் கூட்டி தாளக்கட்டுகளுக்கிணங்க ஆட வேண்டியவையே நிருத்தியமாகும். மேலும் இந்நிருத்தியம் நாட்டியம், நிருத்தம் என்பவற்றைவிடச் சிறந்ததாயும், முக்கியத்துவம் உள்ளதாயும், விளங்குகின்றது.

நாட்டியம்: நாடகத்திற்குச் சிறப்பாயமைந்த ரஸாபிநயம், நாபாபிநயம் ஆகியவற்றைத் தத்ரூபமாகநடித்துக் காட்டுவதே நாட்டியம். இதில் பழைமையான கதைகளே அபிநயிக்கப்படும்.

நிருத்தியத்தில் முதன்மையாகவுள்ள அபிநயம் நான்கு வகைப்படும். அவையாவன ஆங்கிகாபிநயம், வாச்சிகாபிநயம், ஆஹார்யஅபிநயம்,ஸாத்விகாபிநயம்.

ஆங்கிகாபிநயம்: அங்கங்களின் அசைவுகளினால் செய்யப்படும் அபிநயம் ஆங்கிகாபிநயம் எனப்படும்.

வாச்சிகாபிநயம்: காவியங்களிலும், நாடகங்களிலும் காணப்படும் வார்த்தைகளுக்கு அமைவாகச் செய்யப்படும் அபிநயம் வாச்சிகாபிநயம் எனப்படும்.

ஆஹார்ய அபிநயம்: நடனமாடுபவர் ஆடை, ஆபரணங்களாற் தம்மை அலங்கரித்துக்கொண்டு செய்யும் அபிநயம் ஆஹார்ய அபிநயம் எனப்படும்.

ஸாத்விகா அபிநயம்: உள்ளத்தில் எழும் உணர்ச்சியை விளக்கிக் காட்டும் பாவங்களைக் கொண்டது ஸாத்விகா அபிநயம் எனப்படும்.

அங்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை திரியாங்கம் எனப்படும். அவையாவன:

1. அங்கம்
2. ப்ரத்யாங்கம்
3. உபாங்கம்

அங்கம்: தலை,விரல்,கை, மார்பு, இடை, பக்கம், பாதம் என்பனவாகும்

ப்ரத்யாங்கம்: புயம், கழுத்து, மணிக்கட்டு, இரு தொடைகள், முழங்கால், கணைக்கால், முதுகு என்பனவாகும்.

உபாங்கம்: கன்னம், விழி, இமை, புருவம், மூக்கு, பல், உதடு, நாக்கு, முகவாய்க்கட்டு என்பனவாகும்.

இவற்றுள் தலை, கண்கள், கழுத்து, கைகள், கால்கள் ஆகிய உறுப்புகள் முக்கியமானவை.

தலையின் அசைவுகள், ஒன்பது வகை சிரோ பேதங்கள் எனவும், கண்களின் அசைவுகள் எட்டுவகைத் திருஷ்டி பேதங்கள் எனவும் கழுத்தின் அசைவுகள் நான்கு வகை க்ரீவா பேதங்கள் எனவும் வகுக்கப்பட்டுள்ளன. பாதபேதங்கள் நான்கு வகையாகவும் உறஸ்த பேதங்கள் (கை) அஸம்யுத ஹஸ்தம், ஸம்யுத ஹஸ்தம், அபூர்வ ஹஸ்தம் என மூன்று வகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. அஸம்யுத உறஸ்தம் இருபத்தெட்டு முத்திரைகளைக் கொண்டது. ஸம்யுத உறஸ்தம இருபத்தி னாங்கு முத்திரைகளைக் கொண்டது. இக் கலைக்கான பயிற்சியை அடவு, கோர்வை, தீர்மானம், உருப்படிகள் என்ற படிமுறையில் பயின்று கொள்கின்றார்கள்.

அடவு :- தலை, கால், சரீர அசைவுகள் ஒரே நேரத்தில் ஒருங்கே இணைந்து தாளச் சீர்ப்பிரமாணத்திற்கேற்ப வருவது அடவு எனப்படும். ஒவ்வொரு அடவும் சிரோ பேதங்கள் ,திருஷ்டி பேதங்கள்,உறஸ்த பேதங்கள் ,பாத பேதங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த அடவுகள் ஒவ்வொன்றும் விளம்ப,மத்திம,துரித ஆகிய மூன்று காலங்களிலும் செய்யப்படும். அடவுகளில் மென்மையான அடவு,வன் மையான அடவு மெய்யடவு போன்ற வகைகள் உண்டு.

கோர்வை:-பல அடவுகளின் சேர்க்கையே கோர்வை எனப்படும். இது லயத்துடன் அமைந்திருக்கும். கோர்வையில் தொகுக்கப்படும் அடவுகள் சமச்சீராக அமைந்திருக்கும். கோர்வை அழுத்தமாகவும், உறுதியாகவும் செய்யப்பட வேண்டும். பாட்டினது வன்மை மென்மைக்கேற்ப கோர்வை கள் அமைய வேண்டும். கோர்வை 'கிடதக தரிகிடதொம்' அல்லது

'ததிங்கிணதொம் ' என்ற தீர்மானத்துடன் முடிவுறும் இந்த அடவு மருட அடவு எனப்படும்

தீர்மானம்:-மிருதங்கச் சொற்களுடன்சேர்ந்த ஜதிகளைக் கொண்டமருட அடவுகளுடன் முடிவுறும் கோர்வைகள் தீர்மானம் எனப்படும்.

உருப்படிகள்:-தாளத்துடனும் இசையுடனும் அமைக்கப்பட்ட திட்டமான ஒரு நடன உருவமே நடன உருப்படி என அழைக்கப்படுகின்றது.

அலாரிப்பு ,ஜதிஸ்வரம்,சப்தம், வர்ணம்,பதம்,தில்லானா,ஸ்லோகம் என்பன பரதநாட்டியத்தின் முக்கிய உருப்படிகளாகும்.

அஷ்டபதி ,ஜாவளி, கீர்த்தனை போன்ற உருப்படிகளும் பரதநாட்டியக் கச்சேரியில் இடம் பெறுவதுண்டு. இவற்றினைப் பற்றிச் சுருக்கமான அறிமுகம் கீழே தரப்படுகின்றது.

அலாரிப்பு:- அலர் என்ற சொல் தமிழில் மலர்வது என்று பொருள்படும். இவ்வுருப்படி நடனமாடுபவர் தன் உடலை மலராக நினைத்து அதனைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. உருப்படிகளின் வரிசையில் இது ஆரம்ப நிகழ்ச்சியாக விளங்கும். குரு, தெய்வம் சபையினர் என்போருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியாகவும் இது அமைந்துள்ளது. இது எவ்வித பாடல்களோ அபிநயங்களோ இன்றி ஆடப்படும் உருப்படியாகும். இதில் 'தாம்திதா தெய்ததெய் ' எனும் சொற்கட்டு விளம்ப,மத்யம,துரித, காலங்களில் இடம் பெறுகின்றது. இவ்வுருப்படி நாட்டை இராகத்தில் பாடப்படுகின்றது.

ஜதிஸ்வரம்:- அலாரிப்பிற்கு அடுத்த நிகழ்ச்சி ஜதிஸ்வரமாகும். இது ஸ்வரங்களையும் ஜதிகளையும் கொண்டதாக இருக்கின்றது. இது பல்லவி ,அனுபல்லவி,சரணம் என்ற பகுதிகளையுடையதாக இருக்கின்றது. ஜதிஸ்வரத்தில் முதல் ஸ்வரப் பகுதியை எடுத்துப் பாடியதும் மேற்காலத்தில் ஒரு ஜதியுடன் நிகழ்ச்சி தொடங்குகின்றது.

இவ்வுருப்படியினை மேலும் மெருகூட்டுவதற்காக ஒருசில மெய்யடவுகளை ஜதிஸ்வரத்தின் ஆரம்பத்திலும் சில கோர்வைகளின் இறுதியிலும் செய்கின்றார்கள்.

சப்தம்:- நாட்டிய உருப்படிகளின் வரிசையில் மூன்றாவதாக வரும் உருப்படி சப்தமாகும். முதலில் அபிநயத்தை அறிமுகப்படுத்தும் உருப்படியும் இதுவாகும். இவ்வுருப்படி சிவபெருமான்,கண்ணன்,முருகப்பெருமான், ஸ்ரீராமன் மேல் பாடப்பட்டவையாகும். ஆரம்பத்தில் சப்தங்கள் யாவும் காம்போதி இராகத்தில்தான் பாடப்பட்டு வந்தன. ஆனால் இப்போது ராகமாலிகாவிலும் பாடப்படுகின்றது. இவ்வுருப்படி பெரும்பாலும் மிஸ்ரசாபு தளத்தில் தான் அமைந்துள்ளது. இது பத்து (10) தொடக்கம் பதினைந்து(15) நிமிடங்களுக்குரியதாக அமைந்துள்ளது.

வர்ணம்:- பரத நாட்டிய நிகழ்ச்சியில் சப்தத்தைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சியாகிய வர்ணம், ஒரு நாட்டிய நிகழ்ச்சியின் சிகரமாக விளங்கும். வர்ணம் என்பது இசைக்கும் நடனத்திற்கும் பொதுவானதாகும். பாட்டிற்குரிய வகையினைத் தானவர்ணம் என்றும், நடனத்திற்குரிய வகையினை பத வர்ணம் என்றும் அழைப்பர். வர்ணம் பூர்வாங்கம், உத்தராங்கம் என்னும் இரு பிரிவுகளையுடையது. பூர்வாங்கம் என்பது பல்லவி ,அனுபல்லவி ,முத்தாயிஸ்வரம் என்ற கிரமத்தைக் கொண்டுள்ளது. உத்தராங்கம் என்பது சரணம்,சரணஸ்வரங்கள் என்பவற்றைக்கொண்டிருக்கும்.சரணத்துக்கு எத்துக்கடைப்பல்லவி என்றும் உபபல்லவியென்றும் சிட்டைப் பல்லவியென்றும் வேறு பெயர்கள் உண்டு

பதம்: கடினமான ஜதிகளைக்கொண்ட வர்ணத்தினை நீண்ட நேரம் ஆடிய பிறகு எளியமுறையில் அபிநயத்திற்குமட்டும் முக்கியத்துவம் அளித்து பதங்களை ஆடும் வழக்கம் இருந்து வருகிறது. பதம் என்ற சொல் பொதுவாக வார்த்தைகளைக்குறிப்பிடும். பதங்கள் நாட்டியத்திற்காகவேஅமைக்கப்பட்டன எனில் மிகையாகாது. இது அபிநயத்திற்கே முழுவதும் உரியதாக அமைக்கப்பட்டுள்ளது. சங்கீதசாஸ்திர முறைப்படி பதமென்பது நாயகாநாயகி பாவம்நிறைந்தது. நாட்டியத்திற்காக உபயோகிக்கப்படுவதென்றாலும் அதன் தாதுவின் அழகிய அமைப்பை (மெட்டு) இட்டு இசைக்கச்சேரிகளிலும் பாடுவதுண்டு.

கீர்த்தனை:கீர்த்தனை என்ற சொல் இசைப்பாடல், புகழ்ச்சி எனப் பொருள்படும். கீர்த்தனைகள் சுருதிகளுக்குமுன்னோடியாகும். இதை 15ம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார் அவர்கள் உருவாக்கினார். இவை பல்லவி, சரணம் என்ற அங்கங்களையுடையதாக இருந்தன, பின் 16 ஆம் நூற்றாண்டில் புரந்தரதாசர் பல்லவி அனுபல்லவி சரணம் ஆகிய பிரிவுகளை அறிமுகப்படுத்தினார்.

ஜாவளி: சிருங்கார இரசத்தையும் நாயக நாயகி சகிபாவத்தையும் வெளிப்படுத்தும் ரீதியில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய உருப்படியே ஜாவளிஆகும். இது நாட்டியத்திற்கு உபயோகிக்கப்படுகின்றது இதன் அமைப்பானது உற்சாகம் ஊட்டக்கூடியதாகவும், சுலபமானதாகவும் இருக்கும். நடைமுறை மொழியில் நாயகா, நாயகி நியதிகளை விளக்குவனவாக இதன் சாகித்தியம் அமையும். பதங்களைப்போல் ஜாவளிகளிலும் அபிநயமே பிரதானமாக விளங்குகின்றது. பதங்களில் குறிப்பிடப்படும் நாயகர்கள் அநேகமாக கடவுளாகவே இருப்பர். ஜாவளிகளில் மனிதர்களையும் தலைவனாகக் கொள்ளும் சிருங்காரத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். அநேக ஜாவளிகள் சிருங்காரம் நிறைந்தனவாக இருக்கும்.

அஷ்டபதி:அஷ்டபதி ஜயதேவரால் இயற்றப்பட்ட உருப்படியாகும். இதனைக் கீதகோவிந்தம் என்று அழைப்பர். ராதை,கிருஷ்ணன்,சகி ஆகிய மூவருமே இக்காவியத்தின் கதாபாத்திரங்களாவர். இது கிருஷ்ண பரமாத்மாவிடம் ராதை கொண்ட அன்பினை சித்தரித்துக் காட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

தில்லானா: திரித்தில்லானா என்னும் தேசிய வகையினின்று உதித்ததே தில்லானாவாகும். உணர்ச்சியைத்தட்டி எழுப்பவல்ல வகையில்அமைக்கப்பட்ட நாட்டிய சங்கீத உருப்படியே இது இதன தாது கவர்ச்சிகரமாகவும், சுலபமாகவும் அமைந்திருக்கும். சொற்கட்டுக்களையே மையமாகக் கொண்டு இயற்றப்படும் உருப்படி தில்லானாவாகும்.

இது ஜதி போல் உச்சரிக்கப்படாமல் பாடப்படும் இசை உருப்படியாகும். இதன் சாகித்தியத்தில் ஸ்வரங்களும் ஜதிகளும் கலந்து வருகின்றன.

ஸ்லோகம்:- தாளத்தில் பாடப்படாது கவிதைகளை இராகமாக நீட்டிப்பாடுவதற்கு விருத்தம் என்றும், ஸ்லோகம் என்றும் கூறுவர். இதனைத் தமிழில் விருத்தம் என்றும், வட மொழியில் ஸ்லோகம் என்றும் தெலுங்கில் பத்யம் என்றும் சொல்வார்கள். இந்த மூன்று சொற்களும் கவிதையையே குறிக்கும். க்ருஷ்ணா கானாமிருதம்போன்ற வட மொழிக் கவிதைகளும் நடராசர் பத்து, திருவாசகம், பிள்ளைத்தமிழ் போன்ற தமிழ்மொழிகவிதைகளும் பாடப்பட்டு ஆறஅமர அபிநயிப்பர். இது கடவுளின் பல அற்புத லீலைகளை சித்திரிப்பதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நடன உருப்படிகளில் ஆடப்படும் இறுதி உருப்படியாகவும் உள்ளது.

## புதிதாகச் சேர்க்கப்பட்ட உருப்படிகள்:-

**கவுத்துவம்:** அலாரிப்பிற்கு அடுத்த நிகழ்ச்சியாக இது ஆடப்பட்டு வருகிறது. இதில் தாளப்பின்னணியுடன் முத்திரைகள், அடவுகள் கலந்து ஆடப்படும் ஜதிகள் சொற் கட்டுகளாக வரும். இவை கடவுளின் புகழ்பாடுவனவாக அமைக்கப்பட்டுள்ளன. இது ஜதியுடன் ஆரம்பமாகும். பின் சாகித்தியம் தொடரும். சாகித்தியம் முடிந்ததும், மீண்டும் ஜதிகள் வருகின்றன. ஜதிகளுக்கு அடவுக்கோர்வைகளுக்கும், சாகித்தியங்களுக்கு அபிநயமும் செய்யப்படுகின்றன. இது சிவன், விநாயகர், முருகன், கிருஷ்ணன் போன்ற கடவுளர் மேல் அமைக்கப்படுள்ளது.

தோடய மங்களம்:- இது கடவுளை வாழ்த்துவதாக அமையும். இது ஜய ஜய, என்றும் மங்கள என்றும் சொற்களைக் கொண்ட பாடலாக இருக்கும். இது அநேகமாக இராகமாலிகையாகவும் தாளமாலிகையாகவும் கூட அமைந்திருக்கும். முன்பெல்லாம் இதற்கு நடனம் ஆடப்படவில்லை. தற்காலத்தில் இதனை ஆட்டத்திற்கு உகந்ததாக ஏற்படுத்தியுள்ளனர்.

முன்பு இது மேளம் கட்டுவதற்கும், இறைவனை வழிபடுவதற்குமே பாடப்பட்டு வந்தது. பல நிகழ்ச்சிகளில் இந்த சம்பிரதாய தோடய மங்கள பாட்டிற்குப் பதிலாக ஏதேனும் கீருதியைப் பாடி வருகின்றார்கள். அந்தந்த ஊரின் ஆலயத்தின் முக்கிய கடவுளின் பெயரிலும் தோடய மங்களங்கள் உள்ளன.

புஷ்பாஞ்சலி:-புஷ்பம் என்பது மலர்கள் என்று பொருள்படும்.புஷ் பாஞ்சலி என்பது மலர்களினால் செய்யப்படும் வணக்கமாகும். இது கடவுளுக்கும் அரங்க தேவதைக்கும் மலர்களினால் அஞ்சலி செலுத்துவ தாக அமைக்கப்பட்டிருக்கின்றது. சிலர், இவ்வுருப்படியினை நடன ஆரம்பத்தில் ஆடுவதை இப்போது வழக்கப்படுத்தியுள்ளனர். இது வெறும் சொற்கட்டுக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருப்படி ஆடும் போது சிலர் உண்மையான மலர்களை கைகளில் வைத்து ஆடுவார்கள். சிலர் மலர்களை கைகளில் வைத்திருப்பது போன்ற பாவனையுடன் ஆடுவார்கள். இதுஅநேகமாக நாட்டை ராகத்தில் அமைந்ததாக இருக்கும்.

இசை:- பரத நாட்டியக் கச்சேரியில் இசைக்கப்படும் இசை கர்நாடக இசை மரபையொட்டிய இசையாகும். நடன ஆசிரியர் பாடல்களைப் பாடியும் ஜதிகளைச் சொல்லியும் நட்டுவாங்கம் செய்வார். பரத நடனத் தில் தாளமே பிரதான வாத்தியமாகும். தாளத்துடன் மிருதங்கமும் பிரதான இடம் வகிக்கும். தற்போது வயலினும் முக்கிய இடம் வகிக்கின்றது. முன்பு வீணை,குழல் என்பனவும் பிரதான வாத்தியங்களாக இருந்துள் ளன. என்று அறிகின்றோம்.

உடை :-பரத நாட்டியக் கச்சேரியில் இடம் பெறும் உடையமைப்பு காலத்துக்குக் காலம் மாறுதல் அடைந்து வந்துள்ளது.

பரத நாட்டியமானது 'சதிர்' என வழங்கப்பட்ட காலத்தில் கால் முழுவதையும் மூடும் பைஜாமாவும் அதன் மேல் ஒன்பது கஜம் சேலையும் முழங்கை வரை அமைந்த ரவிக்கையும் அணிந்திருந்தனர்.

அந்தச் சேலை துய்யா சேலை என்றழைக்கப்பட்டது. அது ஜரிகையி னால் அமைக்கப்பட்டது. தற்போது ஆடைகளை விசிறி மடிப்போடு அழகாகத் தைத்து அணிகின்றனர்.

நாட்டிய நாடகத்தில் பாத்திரத்தின் தன்மைக்கேற்ப உடைகளும் அவற் றின் வர்ணங்களும் தெரியப்படும்.

அணிகலன்கள் :- பரத நாட்டிய நிகழ்ச்சியில் தலையிலிருந்து கால்வரை தற்போது பயன் படுத்தப்படும் நகைகள்

தலை :- ராக்கொடி, தலைச்சோடனை(உச்சிப்பட்டம்,நெற்றிப்பட்டம், சந்திர பிறை, சூரிய பிறை) ஜடைநாகம், பின்னல் நுனியில் குஞ்சம்
முகம் :- காதில் தோடு,ஜிமிக்கி,மாட்டல், மூக்கில் மூக்குத்தி, நத்து,புல் லாக்கு
கழுத்து:- அட்டியல் கீழ்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றோ,இரண்டோ அணியலாம்.
முத்துஹாரம், மரகண்டிபதக்கம், மாங்காய் மாலை, பதக்கம், சங்கிலி.
கை:- புஜத்தில் அணிவது வங்கி அல்லது நாகொத்து கையில் அணிவது வளைகள் அல்லது கங்கணம் அல்லது பட்டைக் காப்பு, விரலில் அணிவது மோதிரம்
இடுப்பு :- ஒட்டியாணம்,
கால்கள்:- சலங்கை , கொலுசு
மேற்கூறிய நகைகள் தங்கநிறத்தில் அல்லது தங்கத்தில் அமைவது வழக்கம் மாணிக்கமோ அல்லது சிவப்புக் கற்களோ அவைகளில் அதிகமாகப் பதிக்கப்பட்டிருப்பது தென்னாட்டுச் சம்பிரதாயம்.

ஒப்பனை:- சாதாரணமாக முகத்தைக் கெடுக்காத அளவில் முகப்பூச்சு செய்து கொள்ள வேண்டும். முன்பு சதிர்க் கச்சேரிக்கு மஞ்சள் பூசிய முகத்தில் புருவம் தீட்டி கண்களில் அஞ்சனமிட்டு, திலகமிட்டு வெற்றிலை பாக்கு போடப்பட்ட சிவப்பு உதட்டுடன் ஆடுபவர்கள் காட்சியளித்தார்கள்.

அதன் பின் முத்து வெள்ளை என்று அழைக்கப்படும் தூள் (பவுடரைப்) பயன்படுத்தினார்கள். இதனைச் சிவப்புக் கலவையுடன் கலந்து மைதீட்டி, உதட்டிற்கு சிவப்புச் சாயம் பூசி ஆடுபவர்கள் காட்சியளித்தார் கள்.

இன்று ஒப்பனைக் கலையில் பல புதிய கலவைகள் வந்து விட்டன. இவற்றை நல்லமுறையில் உபயோகித்தால் வியர்வை ஏற்பட்டாலும் முகம் வாடாது காட்சியளிக்கும். எண்ணை கலந்த ஆதாரப் பூச்சு,பவுடர்,மை பென்சில் உதட்டுச் சாயம், திலகம், நகச்சாயம்,கைவிரல்,பாதங்களுக்கு மருதாணி அல்லது செஞ்சாயம் பூசும் வழக்கமும் இன்று உண்டு

சி.பற்குணம்

நன்றி :- வாழ்வியற் களஞ்சியம்
நாட்டியக்கலை - கலாநிதி பத்மா சுப்பிரமணியம்
தொலைக்கல்விப்பிரசுரங்கள்
தமிழர் மரபுகள் - தஞ்சைப்பல்கலைக்கழகம்

கணனி ,அச்சுக்கோர்பு : திருமதி.கே.வி.ஸ்ரீஸ்கந்தராஜா.

## கிளிவிடு தூது

சொல்லவல்லாயோ கிளியே
சொல்ல நீ வல்லாயோ (சொல்ல...)

வல்லவேல் முருகன் தனை இங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று (சொல்ல..)

தில்லையம்பலத்தே நடனம் செய்யும் அமரர் பிரான் - அவன்
செல்வத் திருமகனை இங்கு வந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடுவாயென்று (சொல்ல..)

அல்லிக் குளத்தருகே ஓர் நாள்
அந்திப் பொழுதினிலே ஆங்கோர்
முல்லைச் செடியதன் பாற்செய்த வினை
முற்றும் மறந்திடக் கற்றதென்னே என்று (சொல்ல..)

பாலைவனத்திடையே தனைக் கைப்
பற்றி நடக்கையிலே தன் கை
வேலின் மிசையாணை வைத்துச் சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தை செய்வாயென்று (சொல்ல..)

மகாகவி சுப்ரமணியபாரதியார்





# சக்தியிடம் விண்ணப்பம்

கற்பக வல்லி நின்
பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாயம்மா
தேவி ........... (கற்பக)

பற்பலரும் போற்றும்
பதிமயிலா புரியில்
சிற்பம் நிறைந்த உயர்
சிருங்காரக் கோயில்கொண்ட (கற்பக)

நீ இந்த வேளைதனில்
நேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில்
நாடுதல் யாரிடமோ
ஏனிந்த மௌனமம்மா
ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே
ஆதரித் தாளுமம்மா (கற்பக)

எல்லோர்க்கும் இன்பங்கள்
எளிதாய் இரங்கி என்றும்
நல்லாக்கி வைத்திடும்
நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி
காதல் புரியும் அந்த
உல்லாசியே உமா
உனை நம்பினேன் அம்மா (கற்பக)

நாகேஸ்வரி நீயே
நம்பிடும் எனைக் காப்பாய்
வாகேஸ்வரி மாயே
வாராய் இது தருணம்
பாகேஸ் ஸ்ரீ தாயே
பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே
உலகினில் துணை அம்மா (கற்பக)

அஞ்சனம் மையிடும்
அம்பிகே எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும்
வஞ்சியே நின்னிடம்
தஞ்சம் என அடைந்தேன்
தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரட்சிப்பாய்
கெஞ்சுகிறேன் அம்மா (கற்பக)

பாடலாசிரியர் : யாழ்ப்பாணம், என். வீரமணி ஐயர்
ராகம் : ராகமாளிகை தாளம் : ஆதி

# சீதாராம கல்யாணம்

எண்ணரும் நலத்தினாள் இனைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை கல்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

யாரோ இவர் யாரோ
என்ன பேரோ அறியேனே

காருலாவும் சீர் குலாவும்
மிதிலையில்
கன்னி மாடம் தன்னில்
முன்னே நின்றவர் - யாரோ -

சந்திர பிம்ப முகமலராலே
என்னைத் தானே பார்க்கிறார்
ஒருக்காலே அந்த நாளில்
பந்தம் போலே உருகிறார்
இந்த நாளில் வந்துசேவை தருகிறார்

தடுத்து இமையாமல் இருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்

கோமகள் முன்ஜனகன் குளிர் நல்சீர்
பூமகளும் பொருளும் எனநீர் என்
மாமகள் தன்னோடும் மன்னுதி என்ன
தாமரை அன்ன தடக்கையில் ஈந்தான்

நன்றிகள்..........

நடன ஆசிரியை,

பாடகர்கள்,

வாத்தியக் கலைஞர்கள்,

ஒப்பனையாளர்

ஒலி, ஒளி அமைப்பாளர்கள்;

புனித சூசையப்பர் கல்லூரி அதிபர்,

மலராக்கத்திற்கு உதவியவர்கள்,

வாழ்த்த வந்த கலை உள்ளங்கள்,

தலைவர்

..........ஆகியோருக்கு.

அபிராமி பற்குணம்.

மனோ பற்குணம்.

சி.பற்குணம்

அச்சுக்கோப்பு: திருமதி.பிலோமினா புவனேந்திரராஜா

அச்சுப்பதிவு: பி.முருகேசு.

மலர் அமைப்பு: நந்தினி சேவியர்.

நடன அரங்கேற்றம் செய்யும்

அபிராமி

அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

**'CO-OP INN'**

திருகோணமலை வீதி - மட்டக்களப்பு

தொலைபேசி : 065 - 2353

உங்கள் புடவை மற்றும் கைப்பணிப் பொருட்களுக்கு

நாட வேண்டிய இடம்

**கைத்தறிப் புடவை விற்பனை நிலையம்**

| | |
|---|---|
| **கிறீன் வீதி** | **கல்முனை வீதி** |
| **திருகோணமலை** | மட்டக்களப்பு |

நடன
அரங்கப் பிரவேசம்
செய்யும்

# அபிராமி

கலை ஆற்றலில் உயர்ந்து மென்மேலும்
புகழ்பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்

✡

**கற்பகம்**

**பனை அபிவிருத்திச் சபை**

*244, காலி வீதி*

*கொழும்பு 4*

நடன அரங்கப் பிரவேசம் செய்யும்

# அபிராமி

கலைத்துறையில்
மேலும் புகழ்பெற்று உயர்ந்திட
வாழ்த்துக்கள்

ஸ்ரீ ஐயனார் அண்ட் கோ
ஆட்டுப்பட்டித் தெரு
கொழும்பு 13